Journal of Management and Economics (JME)
Faculty of Management and Commerce |South Eastern University of Sri Lanka
ISSN 2950-7227 | Vol: 1 | Issue: II| July 2023

# உலக சுற்றுலா துறையில் கொரோனா வைரஸ் நோயின் தாக்கம் குறித்த ஓர் ஆய்வு

**Suganiya Nahuleswaran**

Culture Tourism, Department of History, University of Jaffna.
Correspondence: Nahulsuganiya15@Gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

சுற்றுலாத் துறை இன்று வளர்ச்சியடைந்த நாடுகளில் மட்டுமன்றி வளர்முக நாடுகளிலும் காணப்படும் பொருளாதார வளர்ச்சிக்கான உள்ளார்ந்த ஆற்றலை கொண்டிருக்கும் ஒரு துறையாகும். சுற்றுலாத்துறையானது பண்டைய காலத்தில் இருந்து இன்று வரை உலகளாவிய ரீதியில் ஒரு பரிணாமத்தின் அடிப்படையில் வளர்ச்சி பெற்று வந்துள்ளது. இவ்வாறாக ஆண்டு தோறும் படிப்படியாக வளர்ச்சி பெற்று வந்த சுற்றுலாத்துறையில் 2019ம் ஆண்டு கொரோனா வைரஸின் தாக்கம் சுற்றுலாத்துறையை புரட்டிப் போட்டது. அந்தவகையில் சர்வதேச ரீதியாக சுற்றுலாப்பயணிகளின் வருகை சுற்றுலாத்துறை வேலைவாய்ப்பு சுற்றுலாத்துறை வருமானம் என்பவற்றில் மில்லியன் கணக்கிற்கு மேலாக பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளது. எனவே இவ்வாய்வானது கொரோனா வைரஸ் உலக சுற்றுலாத் துறையில் ஏற்படுத்திய தாக்கம் பற்றி ஆய்வு செய்கிறது. இதற்காக இவ்வாய்வானது இரண்டாம் நிலைத் தரவுகளை அடிப்படையாக கொண்டு விபரணப்பகுப்பாய்வினை பயன்படுத்துகிறது. பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்கள் Ms-Excel கணனி மென்பொருளினை பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளது. ஆய்வின் முடிவாக 2020 ம் ஆண்டு ஏற்பட்ட இத் தொற்று நோயின் உலகளாவிய பாதிப்பு கிட்டத்தட்ட ஒரு பில்லியன் சுற்றுலாப் பயணிகளின் வருகையை பாதித்தது. குறிப்பாக 2020 ஆண்டு 381 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் மாத்திரமே சர்வதேச ரீதியில் பயணங்களை மேற்கொள்ள முடிந்தது. முன்னைய 2019 ம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 81% வீதமாக வருகை குறைவடைந்துள்ளது. மேலும் சர்வதேச சுற்றுலா வருவாயில் Covid – 19 வைரஸின் தாக்கம் கிட்டத்தட்ட -76% மான வருவாயை இழக்க செய்தது. 2020ல் 930 பில்லியன் வருவாயை மாத்திரமே பெறக் கூடியதாக இருந்தது. 2020ம் ஆண்டிலேலேயே கிட்டத்தட்ட 100 தொடக்கம் 120 மில்லியன் வரையான வேலைவாய்ப்புக்கள் இழக்கப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் இவ்வாறான தாக்கங்களிலிருந்து உலகளாவிய ரீதியில் சுற்றுலாத்துறையை படிப்படியாக முன்னைய ஆண்டுகளின் நிலைமைக்கு கொண்டு வருவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு நாடும் மேற்கொள்ள வேண்டும்

**திறவுச் சொற்கள்:-** சுற்றுலாப்பயணிகளின் வருகை, வேலைவாய்ப்பு, வருமானம், இலங்கை சுற்றுலா

## 1. அறிமுகம்

உலகளாவிய ரீதியில் இன்றளவும் பேசப்பட்டு வரும் முக்கிய துறைகளில் ஒன்று சுற்றுலா ஆகும். வல்லரசு நாடுகளில் இருந்து, வளர்ச்சியடைந்து வருகின்ற நாடுகள் வரையும் மற்றும் வளர்ச்சியடையாத நாடுகளிலும் முக்கிய சேவைத் துறையாகவும் மொத்த தேசிய வருமானத்தில் ஒரு கணிசமான பங்கினை வழங்கும் துறையாகவும் சுற்றுலா காணப்படுகின்றது. இன்று உலகளாவிய ரீதியில் பண்டைய காலம் முதல் மனிதன் ஒரிடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு சென்று வந்தான். ஆனால் மக்களிற்கு சுற்றுலா எண்ணக்கரு பற்றிய சிந்தனை தோன்ற முன்னரே வர்த்தகம், மதப்பிரச்சாரம், அரசியல் அபிலாசைகள், போர், என உலகளாவிய ரீதியில் கடந்த காலத்தில் மக்கள் யாத்திரிகராக, வணிகராக, போர் வீரராக தமது இருப்பிடம் விட்டு வேறு இடத்திற்கு நாடுளுக்கு பயணம் செய்து வந்தனர். தொடர்ந்து 5ம் நூற்றாண்டில் ஏற்பட்ட உரோமானியப் பேரரசின் வீழ்ச்சி தொடர்ந்து மத நோக்கத்திற்கான பயணங்களுக்கு அதிக வாய்ப்பளித்தது. இந்துக்கள் வாரணாசிக்கும், கிறிஸ்தவர்கள் ஜெருசலேமுக்கும், முஸ்லீம்கள் மெக்காவிற்கும், பௌத்தர்கள் புத்தகாயவுக்கும் என பயண யாத்திரைகள் மேற்கொண்டு வந்தனர். பயண வரலாற்றில் முக்கிய கட்டமாக தொடர்ந்து ஏற்பட்ட இத்தாலியப் போர்கள் மற்றும் மறுமலர்ச்சியின் உலகளாவிய பரவல் அடுத்தடுத்த சுற்றுலாத்துறையின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகித்தது. தொடர்ந்து 18ம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சி, இயந்திரங்களின் கண்டுபிடிப்பு மலிவான விலையிலும் குறுகிய நேரத்திலும், மக்களின் நுகர்வுகளையும் துரிதப்படுத்தியது. 19ம் நூற்றாண்டின் இறுதியில் நவீன சுற்றுலா என்ற எண்ணக்கரு மக்கள் மத்தியில் உலகளாவிய சுற்றுலா பற்றிய சிந்தனைகளில் அதிக ஈர்ப்பு கொடுக்கப்பட்டது.

அந்த வகையில் TOURISM என்ற சொல் “TOUR” என்ற வார்த்தையில் இருந்து உருவானது. “Tournus” என்ற இலத்தீன் மொழிச் சொல்லில் இருந்து உருவான இவ் “Tour” என்ற சொல் ஒரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு பயணம் செய்வதை குறிக்கின்றது. இதனைத் தொடர்ந்து பல்வேறு தேசிய நாடுகளின் கூட்டமைப்பை சேர்ந்த புள்ளியியல் நிபுணர்களின் குழு “சுற்றுலாப் பயணி” என்ற சொல்லை வரையறை செய்தனர். மகிழ்ச்சிக்காக பயணம் செய்யும் நபர்கள், ஆரோக்கியத்திற்காக பயணம் செய்பவர்கள் அறிவியல், நிர்வாக, இராஜதந்திர, மதங்கள், விளையாட்டு போன்ற கூட்டங்களிற்று பிரதிநிதித்துவதத்திற்காக பயணிப்பவர்கள், வணிக நோக்கங்களுக்காக பயணிக்கும் நபர்கள் மற்றும் கடல் பயணத்தின் போது வரும் நபர்கள் இவ்வாறு பல்வேறு நோக்கங்களிற்காக வருபவர்கள் 24 மணி நேரத்திற்கும் குறையாமலும் ஒரு வருடத்திற்கு மேற்படாமலும் தமது பிரதேசத்தை விட்டு வேறு இடம் செல்பவரையே “சுற்றுலாப்பயணி” என வரையறுத்தனர். இவ் வரையறையை ஏற்றுக் கொண்ட ஐக்கிய நாடுகள் சபை 1963 ஆம் ஆண்டு ரோமில் இடம்பெற்ற உலக சுற்றுலா அமைப்பு (WTO) என அழைக்கப்படும். சர்வதேச அதிகார பூர்வ பயண மற்றும் சுற்றுலா ஒன்றியம் (IUOTO) தொடர்பான ஐக்கிய நாடுகளின் மாநாட்டில் ஒரு புதிய வரையறையைத் தயாரித்தது.

அதன் படி 'ஒருவர் தனது வழக்கமான இருப்பிடத்தை விட்டு வேறு ஒரு நாட்டிற்கோ பிரதேசத்திற்கோ சென்று ஊதியம் பெறும் ஒரு தொழிலைப் பின்பற்றுவதைத் தவிர வேறு எந்த காரணத்திற்காகவும் குறைந்தது 24 மணி நேரத்திற்கு குறையாமல் அங்கேயே தங்கியிருந்தால் சுற்றுலாப் பயணி என அழைக்கப்படுவர்'.

உலகச் சுற்றுலா அமைப்பால் வழங்கப்பட்ட இவ் வரையறை 1993ம் ஆண்டு பெப்ரவரி 22 முதல் மார்ச் 3 வரை இடம்பெற்ற 27வது அமர்வின் ஐக்கிய நாடுகள் புள்ளியியல் ஆணையகத்தால் அங்கீகரிக்கப்பட்டது. இந்த வரையறை சுற்றுலாத் துறையின் ஒரு மையப் புள்ளியாகும். இவ்வாறு உலகளாவிய ரீதியில் படிப்படியாக பரிணாமத்தின் அடிப்படையில் வளர்ச்சியடைந்து வந்த சுற்றுலாத்துறை உலகளவில் இன்று ஒரு பயன் மிகு தொழிலாகவும் மாறியுள்ளது. தேசிய ஒருமைப்பாடு, பண்பாட்டு பரிமாற்றம், மகிழ்ச்சி, பன்னாட்டு ஒற்றுமை, அந்நியச் செலவாணி, தேசிய வருமானம், வேலைவாய்ப்பு, கைத்தொழில் வளர்ச்சி போன்ற விளைவுகளை உலகளாவிய ரீதியில் ஏற்படுத்திக் கொண்டு வருகின்றது இச் சுற்றுலாவே என்றால் மிகையாகாது.

## 2. ஆய்வுப் பிரச்சனை

கொரோனா வைரஸ் தொற்று நோய்க்கு சுற்றுலாத்துறை மட்டும் விதி விலக்கல்ல. சீனாவின் வூஹான் நகரில் 2019ம் ஆண்டு மார்கழி மாதம் இனங்காணப்பட்ட இவ் வைரஸ் உலகளவில் 2020 மார்ச் மாதம் 11ம் திகதி உலக சுகாதார அமைப்பினால் Covid – 19 ஐ ஒரு தொற்று நோயாக அறிவித்தது. இவ் வைரஸ் இன்றளவில் மில்லியனுக்கும் அதிகமான மக்களை பாதித்துள்ளது. உலகளாவிய ரீதியில் அமெரிக்கா, பிரித்தானியா, சீனா போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளில் அதிகமான பாதிப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. இவ் Covid – 19 தொற்று நோயின் நிச்சயமற்ற தன்மையானது உலகளாவிய மக்கள் மத்தியில் பயம் மற்றும் பொருளாதார அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இத் தொற்று நோயின் காரணமாகவே உலகம் முன் ஆயத்தம் இன்றிய வகையில் உலகளாவிய ரீதியில் சுகாதார, சமூக, பொருளாதார அவசர நிலையை எதிர் கொள்கின்றது.

**அட்டவணை 01" உலகளாவிய ரீதியில் கொரோனா தொற்று நோயாளர்கள் பற்றிய விபரம் (June. 08. 2021)**

| | |
|---|---|
| Deaths | 3.774,165 (3.77 million) |
| Cases | 174,054,973 (174 million) |

**மூலம் (JHUU CSSE COVID-19 DATA)**

இவ்வாறு பேரழிவினை ஏற்படுத்தி வரும் இவ் தொற்று நோயினை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்காக பயணக் கட்டுப்பாடு, ஊரடங்கு உத்தரவு

பயணத்தடைகள், தனிமைப்படுத்தல், வீட்டிலிருந்து வேலை செய்யும் திட்டம், போன்ற நடைமுறைகள் உலகளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தன. இதன் மூலம் ஓரளவிற்கு இவ் Covid19 தொற்று நோய் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டது. ஆனால் இந் நடைமுறைகள் உலகளாவிய தொழில் வாய்ப்புத் துறைகளை பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. உலகளாவிய அபிவிருத்தி வாய்ப்பினை ஏற்படுத்தும் துறையாகவும் காணப்பட்ட சுற்றுலாத்துறை மீது பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது எனலாம்.

### 3. ஆய்வின் நோக்கம்

குறிப்பாக உலகளாவிய ரீதியில் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்ட நடமாட்ட கட்டுப்பாடுகள், ஊரடங்கு உத்தரவு, தனிமைப்படுத்தல்கள் காரணமாக சுற்றுலாத்துறையுடன் இணைந்த போக்குவரத்து தங்குமிடம் பயண நிறுவனங்கள், உணவகங்கள், பான சேவைகள் உள்ளிட்ட பல நேரடி, மறைமுக ரீதியான தொழில்கள் சுற்றுலாத்துறையிலேயே பெரிதும் பாதிக்கப்பட்டன. இவ்வாறாக

“ உலக சுற்றுலாத்துறை வருமானம், சுற்றுலாத்துறை வேலை வாய்ப்பு என்பவற்றில் கொரோனா வைரஸ் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது என்பதை இணங்காண்பது இவ்வாய்வின் நோக்கமாகும்.”

### 4. இலக்கிய மீளாய்வு

Musthafa (2019) என்பவர 1978-2017 இலங்கையின் சுற்றுலா வருகை மீது நேரடி வேலைவாய்ப்பானது சுற்றுலாத் துறையில் ஏற்படுத்தும் தாக்கங்களினது போக்கை அடையாளம் காணுவதை நோக்காகக் கொண்டுள்ளது. இங்கு சார்ந்த மாறியாக மொத்த சுற்றுலாப் பயணியரின் வருகையும் சாரா மாறியாக சுற்றுலாத் துறையின் நேரடி வேலைவாய்ப்பு, சுற்றுலாத் துறையினது வருமானம் என்பன பயன்படுத்தப்பட்டுள்ன. மாறிகளுக் இடையிலான தொடர்புகளை இனங்காணுவதற்காக பன்மடங்கு பிற்செலவு முறை, Residual Test, correlation போன்ற முறையியல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. சுற்றுலாத் துறையினரின் வருகை, சுற்றுலாத் துறையின் நேரடி வேலைவாய்ப்பு, சுற்றுலாத் துறை வருமானம் ஆகிய மாறிகளுக்கிடையிலான தொடர்பானது வலுவானது என்றும் சுற்றுலாத் துறையினது வருமானம், நேரடி வேலைவாய்ப்பு என்பன நேரடியாக சுற்றுலாத் துறையினரின் வருகையுடன் தொடர்புபடுகின்றன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

Ganeshamoorthy (2019) சுற்றுலாத் துறையானது இலங்கை பொருளாதாரத்தில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதை அறியும் நோக்கோடு 1977-2016 வரையான காலப் பகுதிக்கான தரவுகளின் அடிப்படையில் ஆய்வை மேற்கொண்டுள்ளார். மொத்த உள்நாட்டு உற்பத்தி, நாணயமாற்று வீதம், வெளிநாட்டு நேரடி முதலீடு மற்றுும் பணவீக்கம் என்பன மாறிகளாக உபயோகிக்கப்பட்டுள்ளதுடன் ARDL அணுகுமுறையும் கையாளப்பட்டுள்ளது. இலங்கை பொருளாதார வளர்ச்சி மீது சுற்றுலாத் துறையானது நேர்கணிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்று அதாவது நீண்டகாலத்தில் பொருளுள்ள வகையில் செல்வாக்கு செலுத்துகின்றன என கண்டறியப்பட்டுள்ளது. மேலும், சுற்றுலாவுக்காக அதிக செலவு செய்யும் சுற்றுலாப் பயணிகளை தூண்டுவதன் மூலமும் சுற்றுலாவுக்கான புத்துணர்ச்சியை அதிகரிப்பதன் மூலமும் பொருளாதார

வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான உயர் பெறுமானம் கொண்ட துறையை நோக்கி சுற்றுலா மேம்பாட்டு நடவடிக்கைகளை வினைத்திறனான முறையில் விரைவுபடுத்த வேண்டும் என குறித்துக்காட்டியுள்ளதுடன் பயன்படுத்தப்படாமல் காணப்படுகின்ற சுற்றுலா வளங்களை பயன்படுத்துவதன் மூலம் சுற்றுலா அபிவிருத்தியை தூண்ட இலங்கையில் பேரின பொருளாதார கொள்கைகளை செயற்படுத்த வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது.

Ranasinghe & Sugandhike (2018) ஆகியோரின் ஆய்வானது இலங்கையை மையப்படுத்தி, இலங்கையினது பொருளாதார வளர்ச்சி மீது சுற்றுலாத் துறையினது பங்களிப்புக்களை அறியும் நோக்குடன் முன்வைக்கப்பட்டது. 1970-2017 வரையான காலத்தொடர் தரவுகளைக் கொண்டு எளிய பிற்செலவு அணுகுமுறையை பயன்படுத்தி முன்வைக்கப்பட்ட ஆய்வானது சார்ந்த மாறியாக சுற்றுலாத் துறை மூலம் பெற்றுக்கொண்ட மொத்த வருமானத்தினையும் சாரா மாறிகளாக சுற்றுலாத் துறையினது வேலைவாய்ப்பு, மொத்த உள்நாட்டு உற்பத்தி, பணவீக்கம், வெளிநாட்டு நேரடி முதலீடு மற்றும் அரசியல் ஸ்திரதன்மையை விளக்க போலி மாறிகளையும் கொண்டுள்ளன. சுற்றுலாத் துறை வருமானத்திற்கும் மேலே குறிப்பிடப்பட்ட பேரின பொருளாதார மாறிகளுக்கும் இடையில் நேர்கணிய தொடர்புள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

Maden et al. (2019) பொருளாதார வளர்ச்சியில் சுற்றுலாத் துறையின் விளைவுகளை இனங்காண்பதற்காக அனுபவ ரீதியான ஆய்வுகளின் அடிப்படையில் துருக்கி நாட்டை மையப்படுத்தி ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்காக 1980-2016 ஆம் ஆண்டு காலப்பகுதியைக் கொண்டு துருக்கி நாட்டினது தேசிய பொருளாதாரங்களில் சுற்றுலாத் துறையின் வருமானங்களின் விளைவுகளை குறித்துக் காட்டியுள்ளார். அதற்காக சார்ந்த மாறியாக மொத்த உள்நாட்டு உற்பத்தியும் சாரா மாறியாக சுற்றுலாத் துறை வருமானமும் பயன்படுத்தப்பட்டுள்ளது. மாறிகளுக்கிடையிலான தரவுகளை இனங்காண்பதற்காக ARDL, ADF முறையியல் கையாளப்பட்டுள்ளது. குறுங்காலம் மற்றும் நீண்ட காலத்தில் பொருளாதார வளர்ச்சி மற்றும் சுற்றுலாத் துறையின் வருமானங்களுக்கு இடையே நேர்கணிய தொடர்புள்ளதாகவும் பேரின பொருளாதார மாறிகள் மீது சுற்றுலாத் துறையானது பொருளுள்ள வகையில் தாக்கத்தை ஏற்படுத்துமென கண்டறியப்பட்டுள்ளது.

Mansoor et al. (2019) ஆய்வினது பிரதான நோக்கம் பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பு துறையில் பாகிஸ்தான் சுற்றுலாத் துறையின் பங்களிப்பினை கண்டறிவதாகும். ADF, Johanson Cointegration போன்றன மாறிகளுக்கிடையிலான தொடர்பினை இனங்காண்பதற்காக கையாளப்பட்டுள்ளது. பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பு என்பவற்றின் மீது சுற்றுலாத் துறையானது நேர்கணிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் இம்மாறிகளுக்கிடையிலான உறவு நிலையானது, நீண்டகாலத்திற்குரியது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. பொருளாதார அபிவிருத்தியில் சுற்றுலாத் துறையானது முக்கிய பங்கு வகிப்பதால் சுற்றுலா மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் எனவும் சுற்றுலாத் துறை தொடர்பான கொள்கைகளில் கவனம் செலுத்த வேண்டும் எனவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

## 5. ஆய்வு முறையியல்

இவ்வாய்வுக்காக 2018- 2021 ஆம் ஆண்டு வரையான இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வுக்குப் பயன்படுத்தப்படும் மாறிகள் தொடர்பான தரவுகளில், இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை மூலமும் இலங்கை சுற்றுலாத் துறை அபிவிருத்தி அதிகார சபை ஆண்டறிக்கை மூலமும் இன்னும் சில சர்வதேச இணையத்தளங்கள் மூலமும் சுற்றுலாத் துறை தொடர்பான தரவுகள் பெற்றுக் கொள்ளப்பட்டன.

சேகரிக்கப்பட்ட காலத்தொடர் தரவுகளானது Excel ஆகிய் தரவுப்பொதி மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு அட்டவணைகள், வரைபட மற்றும் விளக்கப்படங்கள் மூலம் இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 6. பகுப்பாய்வும் கலந்துரையாடலும்

### *6.1 சுற்றுலாப் பயணிகளின் வருகை*

உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு மக்களும் விசித்திரமான நாடுகளை காண்பதற்கும் ஒரு புதிய கலாச்சாரத்தை அனுபவிப்பதற்கும், வரலாற்றைப் பற்றி அறியவும், இயற்றை அதிசயங்கயை அனுபவிக்கவும் மிகவும் விரும்புவார்கள். அந்த வகையில் உலகளவில் ஒவ்வொரு ஆண்டும் பில்லியன் கணக்கான மக்கள் சர்வதேச சுற்றுலாவை மேற்கொள்கின்றனர். குறிப்பாக தாய்லாந்து, ஜேர்மனி, துருக்கி, இத்தாலி, பிரித்தானியா, மெக்ஸிகோ, சீனா, அமெரிக்கா, ஸ்பெயின், பிரான்ஸ் போன்ற நாடுகளில் 2017, 2018 களில் ஆண்டிற்கு மில்லியன் கணக்கான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர். ஆனால் 2019 ஆண்டு டிசம்பர் மாதம் சீனாவில் அடையாம் காணப்பட்ட இவ் Covid -19 வைரஸ் தொற்றுப் பரவல் காரணமாக 2020 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து இன்று வரை உலகம் முழுவதும் பயணங்கள் கணிசமானஅளவு குறைந்த வண்ணமே உள்ளது. தொற்று நோய் பரவுவதை தடுப்பதற்கு நடைமுறைப்படுத்தப்பட்ட பயணத்தடைகள், ஊரடங்கு உத்தரவுகள் மேலும் உலகளாவிய சுற்றுலாப் பயணிகளின் வருகையை குறைத்தன. குறிப்பாக உலகளாவிய சுற்றுலாப் பயணிகளில் அதிகமானோர் சீனாவிலிருந்தே பயணிப்பதனால் இவ் வைரஸின் ஆரம்பப்புள்ளி சீனாவில் என்பதாலும் சுற்றுலாப்பயணிகளை அதிகமாக எதிர்பார்க்கும் நாடுகளிற்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டது. உதாரணம்:- இலங்கை, இந்தியா, மாலைதீவு

இவ்வாறாக இக் Covid – 19 தொற்று காரணமாக உலகளாவிய ரீதியில் மக்கள் திட்டமிட்ட சுற்றுலாப்பயணங்கள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டன. முற்பதிவு செய்யப்பட்டிருந்த விமான சேவைகள்இதங்குமிடங்கள் சுற்றுலாவினை நுகர்வோருக்கு ஏற்பட்ட அதிருப்தியும், அச்சத்தின் காரணமாகவும் ரத்து செய்யப்பட்டது. 2019ம்

ஆண்டு சர்வதேச சுற்றுலாப் பயணிகளின் வீதம் ஆனது ஓரே இரவில் 4% அதிகரித்தது. மேலும் 2019ல் முக்கிய மூல சந்தைகளின் படி முதல் பத்து சந்தைகளின் சர்வதேச சுற்றுலா வலுவானது அதிகரித்து இருப்பதாக பிரான்ஸ் தெரிவித்தது. அதே நேரம் அமெரிக்கா முழுமையான வளர்ச்சியை கண்டது என்றும் கூறப்படுகின்றது. தொடர்ந்து 2020ம் ஆண்டு ஜனவரி முதல் ஒக்டோபர் வரையான மாதங்களின் சுற்றுலாப் பயணிகளின் வருகையை பற்றி நோக்கும் போது UNWTO உலக சுற்றுலா அறிக்கைப் படி

உலகச் சுற்றுலாப் பயணிகளின் வருகையானது ஒரே இரவில் பார்வையாளர்கள் வீதம் ஆனது கடந்த 2019ம் ஆண்டு இதே காலப்பகுதியுடன் ஒப்பிடும் போது 72% குறைந்துள்ளமை சர்வதேச சுற்றுலாப் பயணிகளுக்கு பாதுகாப்பற்ற நிலைமை, நம்பிக்கையற்ற சுகாதார நிலைமை, நிச்சமற்ற நடைமுறைகள் போன்ற அதிருப்திகளை வெளிப்படுத்துகின்றது. ஒரு சுற்றுலாப் பயணி பயணம் செய்ய விரும்பும் போது எதிர் பார்க்கும் விடயம் சுகாதாரம், பாதுகாப்பு, போக்குவரத்து, தங்குமிடம் ஆகியவையே ஆகும். ஆனால் இத் தொற்று நோய் காரணமாக இத் துறைகள் மீதான பாதிப்பு சுற்றுலாத் துறையை முற்று முழுதாக முடக்கம் செய்தது. இதனாலேயே 2020 ஆண்டின் முதல் பத்து மாதங்களில் 900 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் வருகை குறைவாக காணப்பட்டது (2019 உடன் ஒப்பிடும் போது).

குறிப்பாக சர்வதேச ரீதியில் 2020ம் ஆண்டு ஜனவரி முதல் ஒக்டோபருக்கு இடையில் ஆசியா, பசுபிக் நாடுகளில் 82% மத்திய கிழக்கு நாடுகளில் 73% ஆபிரிக்கா நாடுகளில் 69% ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் 68% மான சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைவாகக் காணப்பட்டது (UNWTO, 2020). இதனால் ஒட்டு மொத்த உலக நாடுகளும் பொருளாதார மந்த நிலை, வேலை இழப்பு என்பவற்றை எதிர்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இத்தகைய சுற்றுலாத்துறை மீதான இவ் வைரஸின் தாக்கத்தினால் சுற்றுலாப் பயணிகளின் வருகையை ஏனைய ஆண்டுகளுடன் ஒப்பிட்டு நோக்கும் போது

***உரு 01: உலகளாவிய ரீதியிலும் 2018, 2019, 2020 களின் சர்வதேச சுற்றுலாப் பயணிகளின் வருகை***


*மூலம்: (UNWTO, 2020)*

இத் தரவின் அடிப்படையில் விபரிக்கும் போது 2018 ஆம் ஆண்டு சர்வதேச சுற்றுலாப் பயணிகளின் வருகை 1461 மில்லியனாக இருந்தது. அதாவது 2017ம் ஆண்டுடன் ஒப்பிடும் போது +6% வளர்ச்சி காணப்பட்டது. 2019 ஆம் ஆண்டு சர்வதேச சுற்றுலாப் பயணிகளின் வருகை முன்னைய 2018ம் ஆண்டுடன் ஒப்பிடும் போது +4% வளர்ச்சியடைந்து 1481 மில்லியனாக இருந்தது. ஆனால் 2020ம் ஆண்டு ஏற்பட்ட இத் தொற்று நோயின் உலகளாவிய பாதிப்பு கிட்டத்தட்ட ஒரு பில்லியன் சுற்றுலாப் பயணிகளின் வருகையை பாதித்தது. குறிப்பாக 2020ஆண்டு 381 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் மாத்திரமே சர்வதேச ரீதியில் பயணங்களை மேற்கொள்ள முடிந்தது. இது முன்னைய 2019ம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 81% வீதமாக வருகை குறைவடைந்துள்ளது எனலாம்.

### *6.2. சுற்றுலாத்துறை வருமானம்*

உலகளாவிய பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் இச் சுற்றுலாத் துறையானது சராசரியாக ஒவ்வொரு நாட்டினதும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10மூற்கும் மேலாக பங்களிப்பு செய்கின்றது. மேலும் 2019ம் ஆண்டு உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10.4% சுற்றுலாத்துறை பங்களிப்பு செய்துள்ளதாக கூறப்பட்டுள்ளது. அந்த வகையில் சுற்றுலா ஆய்வறிஞர்களான லிகோரிஷ், கெர்ஷா ஆகியோர் சுற்றுலா பற்றி,

"சுற்றுலா முதலீடு ஏதும் தேவைப்படாத மிக எளிதான தொழில்" ஒவ்வொரு





நாடும் தத்தம் நாடுகளிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்காகவும், உணவுக்காகவும், போக்குவரத்திற்காகவும், பொருட்களை வாங்குவதற்குமேன செலவு செய்கின்றனர். இத் தொகையானது அவ்வவ் நாடுகளிற்கு அந்நியச் செலாவாணியாக

கிடைக்கின்றது. மேலும் நேர்முக, மறைமுக ரீதியான வரிகள் ஒவ்வொரு நாட்டிற்குமான வருமானமாக கிடைக்கின்றது. இவ்வாறு ஒவ்வொரு நாட்டினது தேசிய வருமானத்திலும் கணிசமான பங்கு வகிக்கின்ற இச் சுற்றுலாத்துறை வருமானம் 2020, 2021 இற்றை வரை பாரிய வீழ்ச்சியை கண்டு வருகின்றது. 2019 டிசம்பரின் பின்னர் உலகளாவிய ரீதியில் மற்றும் 2020ல் கிட்டதட்ட 6 மாதத்திற்கு மேல் விமான சேவை பாதிப்பும் சர்வதேச சுற்றுலாப் பயணிகளின் வருகையை பாரியளவில் குறைத்தது. சுற்றுலாவை நுகர்வோருக்கு ஏற்பட்ட அதிருப்தி நிலையே இதற்கு காரணமாகும். மேலும் சுற்றுலாத்துறையுடன் இணைந்து செயற்படும் போக்குவரத்துறை, தங்குமிட வசதிகள், விடுமுறையின் போது பயணிகள் தேடுகின்ற பொருட்கள் மற்றும் சேவைகளினை வழங்குகின்ற பிற துறைகளின் மீதான இவ் Covid – 19 ன் தாக்கம் அத் துறைகள் மூலமாக நாட்டிற்கு கிடைக்கும் நேரடி, மறைமுக வரிப் பணங்கள் முற்று முழுதாக பாதிக்கப்பட்டது. இவ்வாறு சுற்றுலா வருவாயில் ஏற்பட்ட பாதிப்பு குறிப்பாக சர்வதேச சுற்றுலா வருவாயில் இழந்த ஒவ்வொரு மில்லியனுக்கும் ஒவ்வொரு நாட்டினது தேசிய வருமானத்திலும் குறைந்தது இரண்டிலிருந்து மூன்று மில்லியன் வரையான வருவாய் குறையக் கூடும் என UNCTAD மதிப்பிட்டுள்ளது. ஒட்டு மொத்த உலகப் பொருளாதாரத்தின் 3வது பெரிய ஏற்றுமதித்துறை இச் சுற்றுலா ஆகும். ஆதலால் இத் தொற்று நோயின் பாதிப்பு பொருளாதாரம் மட்டுமல்லாது வாழ்வாதாரம், பொதுச்சேவை மற்றும் அனைத்து பிரதேச பிராந்திய வாய்ப்பையும் பாதிக்கின்றது. உலகளாவிய சில நாடுகளிலும், தீவுகளிலும் சுற்றுலா ஆனது 80% மான ஏற்றுமதியை கொண்டிருந்தது. Eg :- மாலைதீவு சுற்றுலாவின் வருவாயின் மூலமாகவே அதிக தேசிய வருமானத்தை பெறுகின்றது.

மேலும் சர்வதேச ரீதியில் மார்ச் 2020 முதல் உலகெங்கிலும் விடுதிகளில் தங்குவோர் வீதம் குறைவடைந்தது. இதனால் பயணப் பணி நிறுவனங்கள், முற்பதிவுகள் சகலதும் பாரிய சரிவை கண்டன. குறிப்பாக உள்ளுர் வாடிக்கையாளர் உணவகத்துறை கடுமையாக பாதித்தது. 2020ம் ஆண்டின் தொடக்கத்தில் உலகளவில் உணவகங்களில் உட்கார்ந்து உண்ணும் பயணிகள் எண்ணிக்கை பாரிய சரிவை எதிர் கொண்டன. இவை பொருளாதாரம் உட்பட வேலை வாய்ப்பினையும் பாதித்தது.

**உரு 02: உலகளாவிய ரீதியில் சுற்றுலாத்துறை வருமானம் 2018, 2019, 2020 ஒப்பீடு**




*மூலம்: (UNWTO, 2020)*

இத் தரவின் அடிப்படையில் நோக்கும் போது சர்வதேச சுற்றுலா வருவாய் ஆனது 2018ம் ஆண்டு 1457 பில்லியன் அமெரிக்கன் டொலர் பெறப்பட்டன. இவ் வருவாய் முன்னைய 2017ம் ஆண்டு வருவாயிலும் பார்க்க +5% வளர்ச்சியினைக் கொண்டுள்ளது. அதே போன்று 2019ம் ஆண்டு சர்வதேச சுற்றுலா வருவாய் பற்றி பார்க்கும் போது 1481 பில்லியன் அமெரிக்கா டொலர் வரை பெறப்பட்டது. இவை 2018ம் ஆண்டுடன் ஒப்பிடும் போது +3% வளர்ச்சியினை காட்டுகின்றது. இவ்வாறாக 2011ல் இருந்து படிப்படியான வளர்ச்சியை நோக்கி வந்த சர்வதேச சுற்றுலா வருவாயில் 2019 டிசம்பரில் ஏற்பட்ட Covid – 19 வைரஸின் தாக்கம் கிட்டத்தட்ட -76% மான வருவாயை இழக்க நேரிட்டது. 2020ல் 930 பில்லியன் வருவாயை மாத்திரமே பெறக் கூடியதாக இருந்தது. 2009ல் ஏற்பட்ட உலக பொருளாதார நெருக்கடியுடன் ஒப்பிடும் போது 2020 ல் ஏற்பட்ட இவ் Covid -19 வைரஸின் பொருளாதாரம் மீதான தாக்கம் 2009ல் ஏற்பட்ட பாதிப்பில் இருந்து 11 மடங்கிற்கு அதிகமான இழப்பினை ஏற்படுத்தியுள்ளது என்றால் மிகையானது

### *6.3. சுற்றுலாத்துறை வேலைவாய்ப்பு*

உலகளாவிய சுற்றுலாத்துறையின் பரிணாம வளர்ச்சியில் இத் துறை ஒரு சேவையாகவே ஆரம்பமானது, ஆனால் பிற்பட்ட காலத்தில் சுற்றுலா ஒரு சேவைத்துறையைத் தாண்டி ஒரு கைத்தொழிலாக மாறி வந்துள்ளது. அந்த வகையில் இத் துறையினூடாக பல தரப்பட்ட மக்கள் தங்கள் தகுதிக்கு ஏற்ப பல வகையான வேலைவாய்ப்புக்களை பெறுகிறார்கள். பெரும்பாலான வளர்ச்சியடைந்த நாடுகளில் மில்லியன் கணக்கிலான மக்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பினை பெறுகின்றனர்.


உதாரணமாக:- வளர்ச்சியடைந்து வரும் நாடான இலங்கையில் 2018ம் ஆண்டு 169,003 பேருக்கு சுற்றுலாத்துறையூடான ஏனைய துறைகள் மூலம் வேலைவாய்ப்பு கிடைக்கப்பெற்றுள்ளது. சுற்றுலாத் துறையுடன் இணைந்த துறைகளான தங்குமிடங்கள்

(Hotel and Restaurants), பயணப் பணி நிறுவனங்கள் (Travel Agents and Tour Operators), விமான சேவை (Airlines), சுற்றுலா வழிகாட்டல்கள் (tour guides), சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் கடைகள் (Tourist shops), பொழுதுபோக்கு நிறுவனங்கள் (Agencies providing Recreational Facilities) சுற்றுலா சார் நிறுவனங்கள் இவ்வாறான சுற்றுலாத் துறையுடன் இணைந்த சேவை நிறுவனங்கள், கைத்தொழில் அமைப்புக்களுடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் திறமையுள்ள, திறமையற்ற மக்கள் ஏராளமானோர் வேலை வாய்ப்புக்களினை பெறுகின்றனர். இவ்வாறு வருடா வருடம் சுற்றுலாத் துறையுடனும், இணைந்த துறைகள் ஊடாகவும் வேலைவாய்ப்புக்கள் வழங்கப்பட்டு வந்த போது 2019 டிசம்பரில் இருந்து ஏற்பட்ட Covid – 19 வைரஸின் தாக்கமானது இற்றை வரை மில்லியன் கணக்கான மக்களின் வேலையினை ஒரு கேள்விக் குறியாக வைத்துள்ளது.

ஒரு சிறந்த ஏற்றுமதித் துறையாகவும், வேலை வாய்ப்பினை ஏற்படுத்தும் துறையாகவும் இருந்த இச் சுற்றுலாவில் சர்வதேச ரீதியில் ஏற்பட்டுள்ள இவ் வைரஸின் தாக்கம் அதாவது வேலை வாய்ப்பின் மீதான பாதிப்பு எதிர்வரும் 2 ஆண்டுகளுக்கு மிகச் சவாலானதாகவே காணப்படுகின்றது. மேலும் இக் Covid – 19 வைரஸின் தாக்கம் பாரம்பரிய மற்றும் சமூக கலாச்சார நிகழ்வுகள் மக்களின் தொட்டுணர கூடிய, தொட்டுணர முடியாத நம்பிக்கைகளில் பாரிய அழுத்தத்தை ஏற்படுத்தியது. இதன் மூலம் பாரம்பரிய நடைமுறைகள் நிறுத்தப்பட்டும், ஒத்தி வைக்கப்பட்டன மற்றும் பண்டைய வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட மக்களின் கைவினைப் பொருட்கள் தயாரிப்பு விற்கப்படும் சந்தைகள் பிற உள்நாட்டு உற்பத்திப் பொருட்களுக்கான சந்தைகள் மூடப்பட்டதால் அதிகமான பெண் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டனர்.

2020ம் ஆண்டில் 100 மில்லியனுக்கும் அதிகமான நேரடி வேலைவாய்ப்பு இழக்கப்பட்டது. அதில் 54% மானோர் பெண்களே ஆவார் மேலும் சுற்றுலாத்துறையில் தொழில் முனைவோராக இருப்பவர்களிலும் மற்றும் உணவகங்கள், தங்குமிடங்களில் முறை சார முறையில் குறைந்த வருமானத்துடன் வேலை செய்பவர்கள் பெண்களே, இவர்கள் அரச ஊழியர்களாக இல்லாததால் இவர்களுக்கு வேலை இழப்பின் போது எந்த ஒரு சலுகை மற்றும் பாதுகாப்பு செயற்பாடுகள் வழங்கப்படுவதில்லை. இவ்வாறாக உலகளாவிய ரீதியில் மைக்கா, குரோவியா, தாய்லாந்து, மாலைதீவு போன்ற நாடுகளில் வேலைவாய்ப்பு விகிதம் 2 ஆக குறையக் கூடும் என UNCTAD மதிப்பீட்டு கூறியுள்ளது. இதன்படி பிரதேச, பிராந்திய, கிராம ரீதியிலான உள்நாட்டு உற்பத்தித் தொழிலாளர்கள், தங்குமிடங்கள், உணவகங்களில் பணிபுரிவோர் ஏராளமானோர் வாழ்வாதாரத்திற்கு கூட மிகவும் சிக்கலை எதிர்கொண்டனர்.

**உரு 03: உலகளாவிய ரீதியிலான சுற்றுலா வேலைவாய்ப்பு பற்றி 2018, 2019, 2020ம் ஆண்டுகளுடன் ஒப்பீடு**




இவ் வரைபின் அடிப்படையில் நோக்கும் போது 2018ம் ஆண்டு உலகளாவிய ரீதியில் சுற்றுலாத் துறை மூலமாக 319 மில்லியன் வேலை வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. 2019ம் ஆண்டில் 334 மில்லியின் வேலைவாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் 2020ம் ஆண்டில் Covid – 19 வைரஸின் சர்வதேச ரீதியிலான ஒட்டுமொத்த துறைகளிலும் ஏற்படுத்திய தாக்கம் 272 மில்லியன் வேலைவாய்ப்பினை மட்டுமே வழங்க முடிந்துள்ளன. இதன் மூலம் 2020ம் ஆண்டிலேலேயே கிட்டத்தட்ட 100 தொடக்கம் 120 மில்லியன் வரையான வேலைவாய்ப்புக்கள் இழக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (UNWTO, 2020)

எனவே மேற்தரப்பட்ட ஒட்டு மொத்த தரவுகளின் அடிப்படையில் உலகளாவிய ரீதியில் சுற்றுலாத் துறையில் ஏற்படுத்திய தாக்கங்களை ஆராய்ந்திருக்கின்றேன். மேலும் இலங்கையில் இவ் Covid – 19 வைரஸின் தாக்கம் சுற்றுலாத்துறையில் எந்தளவிற்கு பாதித்துள்ளது என்பது பற்றி கீழ் காணும் அட்டவணையில் நோக்க முடியும்.

**இலங்கையின் சுற்றுலாத்துறை தொடர்பான 2019, 2020 ம் ஆண்டுக்கான ஒரு ஒப்பீட்டு நோக்கு**

| ஆண்டு | சுற்றுலாப் பயணிகளின் வருகை | சுற்றுலாத்துறை வருமானம் | சுற்றுலாத்துறை வேலைவாய்ப்பு |
|---|---|---|---|
| 2018 | 2,333,796 | 4,380 million dollars | 388,487 |
| 2019 | 1,913,702 | 402,607 million dollars | 402,607 |
| 2020 | 507, 704 | 956 Million dollars | |

*(source- SLTDA annual report -2018, 2019), (SLTDA monthly tourist arrivals report 2020)*

மேலும் இன்றைய தகவல்களின் படி Covid -19 ன் இரண்டாவது அலை சர்வதேச ரீதியில் வியாபித்து வருகின்றது. அதிலும் குறிப்பாக இலங்கை, இந்தியா,

கடுமையான பாதிப்புக்களை எதிர்கொள்கின்றன. இதனால் தொடர் நடமாட்டக் கட்டுப்பாடுகள், ஊரடங்குகள் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் இவை தொற்று நோயை குறைக்கு எடுக்கும் நடவடிக்கையாக இருந்தாலும் இந் நாடுகளில் சுற்றுலாத்துறை மட்டுமல்லாது ஏனைய ஒட்டு மொத்த துறைகளும் முற்று முழுதாக பாதிக்கப்பட்டுள்ளது என்றே கூற வேண்டும். ஆனால் இவ்வாறான தாக்கங்கள் நீடித்து செல்லுமே ஆனால் உலகமே சீர் குழைய நேரிடும் இதனாலேயே ஆரம்பத்தில் இருந்து கட்டுப்பாடுகள் மூலம் தொற்று நோயினை ஓரளவிற்கு ஒரு சில நாடுகள் கட்டுக்கோப்பில் வைத்திருந்தன. பின்னர் தடுப்பூசிகள் கண்டுபிடிக்கப்பட்டு உலகளாவிய ரீதியில் சீனா, அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகள் தொற்று நோயில் இருந்து படிப்படியாக மீண்டு வருகின்றன. ஆனாலும் சுற்றுலாத்துறையை எவ்வாறு கட்டியெழுப்புவது என்பது ஒரு வினாவே ஆதலால்,

UNWTO தனது சுற்றுலா நிபுணர்களின் குழு மத்தியில் ஒரு உலகளாவிய கணக்கெடுப்பினை பெற்றது. இதன் மூலம் 2020ம் ஆண்டு ஒக்டோபரில் ஏற்படுத்திய இக் கணக்கெடுப்பில் பெரும்பாலான வல்லுனர்கள் 2023ம் ஆண்டிலும் 20% மான சுற்றுலா வளர்ச்சியையே எதிர்பார்க்க முடியும் என்கின்றனர். மேலும் சர்வதேச ரீதியில் சுற்றுலா மீண்டும் 2018, 2019 ம் ஆண்டு நிலைமை போன்று மாறுவதற்கு 21/2 முதல் 4 ஆண்டுகள் வரை எடுக்கலாம் எனவும் கூறியுள்ளனர்.

மேலும் இவ்வாறான தாக்கங்களிலிருந்து உலகளாவிய ரீதியில் சுற்றுலாத்துறையைய படிப்படியாக முன்னைய ஆண்டுகளின் நிலைமைக்கு கொண்டு வருவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு நாளும் மேற்க்கொள்ள வேண்டும் என சுற்றுலா நிபுணர்கள் முன்வைக்கின்றனர். அந்த வகையில் தடுப்பூசிகள் பெற்றுக் கொள்ளும் ஒவ்வொருவருக்கும் டிஜிற்றல் கடவுச் சீட்டு முறை அறிமுகம் செய்ய வேண்டும், சுற்றுலாத்துறையுடன் இணைந்த தொழில் முனைவோருக்கான சலுகையுடன் கூடிய கடன்கள், நிவாரணம், வழங்க முன் வர வேண்டும்இ சுற்றுலாத்துறைக்கு பங்களிப்பு செய்யும் ஏனைய துறைகள் மீது அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும், ஆரோக்கியமான பாதுகாப்பான சுற்றுலாத்துறையை ஊக்குவிக்க வேண்டும். இவ்வாறான நடவடிக்கைகளிற்கு பின்னரேனும் 20% மான சுற்றுலாத்துறையின் வளர்ச்சியை எட்ட முடியும்.

## 7. முடிவுரை

எனவே மேற்க்கூறப்பட்ட விடயங்களினைத் தொகுத்து நோக்கும் போது உலகளாவிய ரீதியில் 2019 டிசம்பர் மாதம் உருவான Covid – 19 வைரஸின் தொற்று நோய் காரணமாக பல்வேறு பட்ட துறைகளில் உலகளாவிய ரீதியில் பாதிப்பு ஏற்பட்டது அனைவரும் அறிந்ததே ஆனாலும் தொடர் பயணக்கட்டுபாடுகள், ஊரடங்கு உத்தரவுகள், சுற்றுலாப் பயணிகளின் வருகை, சுற்றுலாத்துறை வருமானம், சுற்றுலாத்துறை வேலைவாய்ப்பு என்பவற்றில் பாரிய தாக்கம் ஏற்படுத்தியுள்ளது. மேற்கூறிய ஆய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இவ் ஆய்வினை அடிப்படையாகக் கொண்டு சுற்றுலாத்துறையில் ஏற்படுத்திய தாக்கம் உலகளாவிய ரீதியில் வேலைவாய்ப்புகள் இழக்கப்பட்டு பல மில்லியன் கணக்கான மக்களின் வாழ்வாதாரம்,

பிரதேச, பிராந்திய, கிராம ரீதியில் அதிகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உசாத்துணைகள்

Central Bank of Srilanka. (2018). Annual Report. Colombo : Central Bank of Srilanka.

Central Bank of Srilanka. (2019). Annual Report. Colombo : Central Bank of Srilanka.

Ganeshamoorthy, K. (2019). The Impacts of Tourism on Economic Growth in Sri Lanka: an ARDL Bound Test Approach. *International Journal of Academic Research and Development, 3*(6), 177-181.

Maden, S.S., Buglan, G., & Yildirim, S. (2019). The Effects of Tourism Sector on Economic Growth - An Empirical Study on Turkey. *Journal of Gasar University 2019, 14*(5), 215-225.

Mansoor, F., Asif, M., & Rehman, H.U. (2019). The Contribution of Sustainable Tourism to Economic Growth and Employment in Pakisthan. *International Journal of Environmental Research and Public Health, 16*(3785), 1-14.

Musthafa, A.M.M. (2019). A Study of Impacts of Tourism Direct Employment Trends on Tourism Arrivals: An Empirical Analysis of Sri Lankan Context. *Journal of Politics and Law,12*(3), 62-68.

Ranasinghe, R., & Sugandhike, M.G.P. (2018). The Contribution of Tourism Income for the Economic growth of Sri Lanka. *Journal of Management and Tourism Research, 1*(2), 67-84.

Srilanka Tourism Development Authority. 2000-2018. Annual Statistical Reports. Colombo: Srilanka Tourism Development Authority, Srilanka.

UNWTO. (2020, January 19). United Nationa World Trade Organization . Retrieved from WORLD TOURISM BAROMETER Nº18 JANUARY 2020.

ரோலன்ட் சில்வா. கலாச்சார பாரம்பரியமும் சுற்றுலாத் துறையும், பொருளியல் நோக்கு (1994), மலர்.20, இதழ்.05, மக்கள் வங்கி, கொழும்பு.

ரொபட் அன்டனி. (2019). சுவால்களுக்கு மத்தியில் மீண்டு வருமா சுற்றுலாத் துறை. Retrieved from: https://www.virakesari.lk/article/60232 (Accessed on: 2019.09.15)

ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு 1,541 கோடி நட்டம். (2020, மே.17). *சுடர் ஒளி,* pp.03.

கொரோனா வைரஸ் 77 நாடுகளுக்கு பரவல். (2020, மார்ச்.4). *திகனரன்,* pp.11.

கொரோனா வைரஸினால் சர்வதேச சந்தைக்கு பாதிப்பு. (2020, பெப்ரவரி.18). *வீரகேசரி,* pp. 05.

கொரோனா தாக்கத்தால் அரச வருமானத்தில் பெரும் வீழ்ச்சி. (2020, மே.17). *தமிழன்,* pp.02.

சரன்யா, டி. (2020). ஊலகளாவிய ரீதியில் 48 இலட்சத்திற்கும் மேற்பட்டோருக்கு கொரோனா. Retrieved from : https://www.virakesari,lk/article/82321 (Accessed on: 2020.05.19)

சீனாவில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்கள் உயர்வு. (2020, பெப்ரவரி.18). *வீரகேசரி,* pp. 18.